**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 5/2017**

**Deposition of Witness for Prosecution : P.W.6**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ்ராஜா | Caste | : |
| Father/Husband Name | : ராமர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 31.07.2025**

**முதல் விசாரணை**

நான் நல்லதாகுநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அப்பா ஆவார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. கடந்த 21.11.2014 ஆம் தேதியில் எதிரி எனக்கு அரசு போக்குவரத்து கழகத்தில் கன்டெக்டர் வேலை வாங்கி தருவதாக கூறி எனது அம்மாவிடம் ரூபாய் 2,00,000/- வாங்கினார். ஆனால் அவர் சொன்னதுபோல் எனக்கு வேலை வாங்கி தரவில்லை. இது சம்பந்தமாக நாங்கள் அவர்களிடம் கேட்டதற்கு, வேலையெல்லாம் வாங்கி தரமுடியாது, உன்னால் முடிந்ததை பார்த்துகொள் என்று கூறிவிட்டார். இது சம்பந்தமாக எனது தாயார் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் எங்கே வைத்து யார் யார் முன்னிலையில் கொடுத்தார்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரியின் தோட்டமும் எங்கள் தோட்டமும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எதிரியின் தோட்டத்தில் கம்பு அறுவடை செய்தபோது அது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு எதிரியும், அவரது மனைவியும் எனது தாய் தந்தையார் மீது புகார் கொடுத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகாரிலிருந்து தப்பிப்பதற்காக எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் தம்பி வடிவேல் என்பவர் கன்டெக்டர் வேலைக்காக கணபதி என்பவரிடம் பணம் கொடுத்து ஏமாந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் நாங்களும் மேற்படி கணபதி என்பவரிடம் பணம் கொடுத்து ஏமாந்துள்ளோம் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மதுரையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கு நாங்கள் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியின் மனைவி கொடுத்த புகாருக்கு பழிவாங்க எதிரி மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2025.07.31 00:29:10 +0530